Registered as a News Paper in Ceylon
P M G No. H A 59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28 ௳ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

[புத். சுஙு] யாழ்ப்பாணம்:- கரவுஞ ஆனிமீ கரு௳ வெள்ளிக்கிழமை (29 ஜூன் 1951) இல. உ௲

24

## சூரிய கரும்புள்ளிகளும் உலக நிகழ்ச்சிகளும்

III

## The Sun Spots And World Events

[ பிரித்தானிய வானசாஸ்திர அங்கத்தவராகிய மட்டுவில் பிரமஸ்ரீ சி. சுப்பிரமணிய ஐயர் ]

சேவ்வானஜோதிகள்

நமது பூமியானது ஓர் பெருங் காந்தக் குழம்பாகும். இதன் ஒரு முனை வட துருவத்திற்கருகாயும் மற்றொரு முனை தென்துருவத்திற் கருகாயும் இருக்கின்றன. இக்காந்த வடதெற்காக இருப்பினும் பூகோள வட - தென் திசைகளுக்குச் சிறிது விலகியிருக்கின்றது. இதன் காந்த சக்தி துருவப் பிரதேசங்களில் ஒருமுகப்பட்டிருக்கிறது. கரும்புள்ளிகள் அதிகத் தோற்றங்காலத்தில் சூரியனது மேற்பரப்பிலிருந்து காந்தப்புயல்கள் (Magnatic Storms) எல்லாப் பாகங்களிலும் செறிகின்றன. அப்பொழுது பூமியின் பக்கமாக வரும் காந்தப் புயல்கள் பூமியின் வடதென் காந்த முனை வழியாக வலித்திழுக்கப்படுகின்றன. அப்பொழுது துருவப்பிரதேசங்களில் அதிசயிக்கத்தக்க பிரகாசமான வெளிச்சத்தைப் பல காட்களாகக் கொடுத்துக்கொண்டிருக்கிறது. வடதுருவத்திற் காணப்படும் ஒளியானது வடதுருவவெண்ணொளி (Aurora Borealis) என்றும், தென்துருவ வெண்ணொளி (Aurora Australis) என்றும் அழைக்கப்படும்.

நாம் குறுக்கே வெட்டப்பட்ட ஒரு மரத்தை அவதானிப்போமாயின், அதன் மத்தியிலிருந்து அனேக வட்டங்கள் ஒன்றையொன்று சூழ்ந்திருத்தலை அவதானிக்கலாம். ஒவ்வொருவட்டமும் மரத்தின் ஒவ்வொருவருட வளர்ச்சியைத் தெரிவிக்கும். இவ்வட்டங்கள் ஒரேவித அகலமின்றியிருப்பதை அவதானிக்கலாம். உஷ்ண காலங்களில் மரங்கள் சிறு வளர்ச்சியுடையனவாகவும், மழைக்காலங்களில் அதிக வளர்ச்சியுடையனவாகவும் இருப்பதை இவ்வட்டத்தால் அறியலாம். சூரிய கரும்புள்ளிகள் தோற்றும் ஒவ்வொரு 11-ம் வருடத்திலும் வழக்கத்திலும் அதிகமாக மழைபெய்வதால் மரவளர்ச்சியைக்காட்டும் வட்டங்களில் ஒவ்வொரு 11-ம் வட்டமும் வழக்கத்திலும் பெரிதாக அகன்றிருப்பதை அவதானிக்கலாம். டக்டர். டக்ளஸ் (Dr. Dauglas) என்பவர் அமெரிக்காவிலுள்ள பைன மரங்களை (Pine trees) ஆராய்ச்சிசெய்ததில், சூரியபுள்ளிகள் அதிகமாக இருந்த வருஷங்களில் இவ்வட்டங்களின் அகலம் ஒவ்வொரு 11-ம் வருடமும் அதிகமாயிருப்பதை அவதானித்து எந்தெந்த வருஷங்களில் சூரியபுள்ளிகள் அதிகமாயிருந்திருக்கவேண்டுமென்பதை மதித்தார். 1826, 1837, 1848, 1860, 1871, 1882, 1894, 1905, 1917, 1928, 1939, 1950ம் ஆண்டுகளில் அனேக கரும்புள்ளிகள் காணப்பட்டன. இப்புள்ளிகள் அதிகமாயிருந்த காலங்களில் அம்மை முதலிய தொற்றுநோய்களும், மிருக நோய்களும் பூகம்பங்களும், தேச கலகங்களும், கொலைகளும் உண்டாவதற்கும் இப்புள்ளிகளே காரணமென்பதை அறிந்தார்கள். 1939-ம் ஆண்டில் நிகழ்ந்த இரண்டாவது மகாயுத்தத்திற்கும் இதுவே காரணமாம்.

22 வருடங்கட்கு மேலாக இக்கரும்புள்ளிகளைப்பற்றியும் அதனால் வரும் பலாபலன்களைப்பற்றியும் ஆராய்ச்சி செய்த ஒருவர், புள்ளிகள் அதிகமாயிருக்குங் காலங்களில் பட்சிகள் மிகக்குறைவாக முட்டைகளை இடுமெனவும், அவைகளுள்ளும் பல கருவற்றனவாயிருக்குமெனவும், தேசாந்தர கமனஞ்செய்யும் பட்சிகள் (Migratory Birds) மிகக்குறையுமெனவும், குயில்கள் உரத்த சத்தத்துடன் கூவுமெனவும் அண்டங்காகங்கள மிகக்குறைந்து சிறுகாகங்கள் அதிகரித்துக் காணப்படுமெனவும், பட்சிகளினது இறகுகளின் நிறங்கள் மாறுதலடையுமெனவும், வண்ணாத்திப் பறவைகள் மிகக்குறையுமெனவும், புழுக்களும், கோழிக்குஞ்சுகளும அதிகமிறக்குமெனவும், எலிகளும், அணில்களும் அதிகமாயிருக்குமெனவும், காட்டெலிகள் கொழுத்து இறக்குமெனவும், புள்ளிகள் குறைவாயிருக்கும்போது நரிகள் அதிகரிக்குமெனவும், நாய்கள் அதிகுட்டிகளை ஈனுமெனவும், மரங்களிற் பழங்கள் மிகக்குறைவாயிருக்குமெனவும், தென்னைகளிற் காய் மிகக்குறையுமெனவும், ஸ்ரார் கொனர் (The Star Connar) என்னும் மாதசஞ்சிகையில் வெளியிட்டிருக்கிறார்; இக் காலத்திற்குரிய ஒளியை ஒளிநிறமாலியால் (Spectroscope) மஞ்சள் (Yellow) செம்மஞ்சள (Orange) ஆகிய இரு நிறங்களும தோற்றுநிருக்கும்.

ஈண்டு கூறப்பட்டன போன்ற இன்னும் அனேக விநோதமான நிகழ்ச்சிகளுக்கெல்லாம் ஆதிகாரணன் சூரியனென்பதையறிந்தே திருமூலரும்,

[மையல்

"ஆறி வார், எங்கள் அண்ணல் பெருமையாறி வார் இந்த அகலமும் நீளமும்?
போறி யாத பெருஞ்சுடர் ஒன்றதின்
வேறி யாமை விளம்புகின்றேனே.
எனக் கூறியுளர்.

L K S LEBBAY BROS
GOLD HOUSE

தற்காலத்திற்கேற்ற
நல்ல வாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ். லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னுதிட்டி, யாழ்ப்பாணம்.

## தோத்திரம்

அரவம்புலி பணியும்பதம் அருளுஞ்சடை யுடையாய்
குரவங்கமழ் குழல்பங்கமர் கூடற்பெரு மானே
பரவஞ்சியர் கமனங்கொலை பழிவஞ்சமொ ருருவாய்
வரவந்தவென் வினைதீரவ ரந்தந்தரு ளினியே

பதஞ்சலி வியாக்கிரபாதர் என்னும் முனிவர்கள் வணங்குகின்ற திருவடிகளையும் அருளோடு கூடியசடையையுமுடைய வெள்ளியம்பலவாணரே, குராமலரையணிந்த வாசனைபொருந்திய கூந்தலையுடைய மீனாஷியம்மையாரை இடப்பாகத்திற்கொண்டருளிய சொக்கலிங்கப்பெருமானே, பொதுமகளிரிடத்து ஆசையும் உயிர்களை வதைத்தலும் வசையும் வஞ்சனையும் ஒருங்குசேர்ந்து ஒருவுருவெடுத்துப் பிறந்தவனாகிய தமியேனிடத்துள்ள பாவங்களெல்லாம் நீங்கும்படி அடியேனுக்கு வரந்தந்தருளுக என்பது பொருள்.

அரவம் - பாம்புபோன்ற கால்களையுடைய பதஞ்சலிமுனிவர்: புலி - புலிக்கான்முனிவரெனப்படும் வியாக்கிரபாதர்; அரவம் புலிபணியும்பதமுடையாய், அருளுஞ் சடையாய் எனத் தனித்தனி கொண்டுகூட்டிப் பொருள்கொள்க; பிறைசசந்திரன் கங்கை முதலியவை போய் ஒதுங்குதற்கு இடமாகிய சடையாதலினுல் அருளுஞ்சடையென்றார். குரவம் - குராமலர்; பரவஞ்சியர் - பரத்தையர்; கமனம் சேர்க்கையெனினுமாம். [86.]

## மந்திரத்தை மறந்த பாம்பாட்டிக்கு ஆபத்து

தெஹிவோவத்தைக்கு அணித்தாகவுள்ள இக்குப்பிட்டியா என்னும் கிராமத்தில் வசிக்கும் அப்புகாமி யென்பவர் ஒரு பாம்பாட்டி, வயசு 75 வரையிலிருக்குமாம்; பாம்பாட்டுந்தொழிலை அந்த அப்புஹாமி ஐம்பதுக்கு மேற்பட்ட வருட காலமாகச் செய்துவந்ததுண்டாம்; நாகந்தீண்டினுர் பன்னூற்றுக் கணக்கானோரை மணிமந்திர ஒளடதங்கள்கொண்டு சுகப்படுத்தியதுண்டாம்: ஆனுற் சில தினங்களுக்குமுன் ஒரு நாகபாம்பு புதருட் புகக்கண்டு அப்புஹாமி அஞ்சாது தன் கையினுல் அதனை இழுக்கப் பற்றிய போது, அது சீறி அப்புஹாமியின் கையில் எழுமுறை தீண்டியது; உடனே அப்புஹாமி அதன நச்சுப் பற்களையும் பிடுங்கிப் பாம்பையும் வைத்துக்கொண்டாராம்; ஆனுலுஞ் சற்றுநேரத்தில் அவர் மயக்கமடைந்தார்; இப்பொழுது கலப்பிட்டியாவிலுள்ள ஒரு சிறந்த விஷகடி வைத்தியர் அவருக்குச் சிகிச்சை செய்கின்ருராம்; ஆனுலும் இன்னமும் மயக்கம் நீங்கவில்லையாம்; உடனே சொல்லவேண்டிய மந்திரத்தைச் சொல்ல மறந்தமையினுற்றுன் இப் பாம்பாட்டிக்கு இந்த ஆபத்து நேர்ந்ததாம்.

## "தாயிற்சிறந்தொரு கோயிலுமில்லை"

"பெற்ற தாயைப் பேணுதவன் பொருட்டெவரும் அநுதாபங் கொள்ள மாட்டார்; உன்னைப் பெற்றவளுடைய காலில் வீழ்ந்து பொறுதி கேள்" என்று மந்தாவலை யென்னுமிடத்தில் சமாசினுஜெ யென்பவனுக்குக் கடிந்து சொன்னுர் கம்பகா நீதிபதியாகிய திரு. விறட் ஈ. அலிஸ்; உடனே அவன் நீதிஸ்தலத்தில் நீதிபதி முன்னிலையிலே தாயின் காலகளில் வீழ்ந்து பொறுதி கேட்க, அவள தன்மகனைக் கண்களில் நீர்ததும்ப அன்புடனை ஏற்றுக்கொண்டாள்: நீதிபதியும் "இதுவல்லவா முறை" என்று மகிழ்ச்சியுடன் கூறினுராம்.

## சோர வியாபாரப் பொருள் அகப்படுத்தப்பட்டன

மயிலிட்டிக் கடற்கரையிலுள்ள ஒரு வீட்டிலே, இந்தியாவிலிருந்து சோரமாகக் கொண்டுவரப்பட்ட பொருள்கள் ஒளித்து வைக்கப்பட்டுள்ளன என்பதைக் கேள்வியுற்று காங்கேசன்றுறை, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை யென்னும் மூன்று துறைமுகங்களிலுமுள்ள அதிகாரிகளும் பொலிசருஞ் சேர்ந்து குறித்த வீட்டைச் சோதனை செய்யும்படி புறப்பட்டுப் போயினராம்: போகும் மார்க்கத்தில் ஒரு மோட்டாரகம் வர, அதிற் சந்தேகங்கொண்டு துறைமுக அதிகாரிகளும் பொலிசரும் அதனைத் தடுத்துச் சோதித்தபோது தங்க நகைகள, வெள்ளிப் பொருள்கள, பிராந்திப் போத்தல்கள் எல்லாமாக ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை அகப்படுத்தி, அந்த இரத்தின சாரதியையும், அதனுள் இருந்த இருவரையும் அகப்படுத்தினர்; ஆனுற் குறித்த வீட்டைப் போய்ச் சோதித்தபோது அங்கு ஒன்றையுங் கண்டிலராம், இப்பொருள்கள் இந்தியாவிற பிரான்ஸிய ராச்சியத்தைச் சேர்ந்த காரைக்காலிலிருந்து கொண்டுவரப்பட்டன எனச் சொல்லப்படுகிறது.

இலங்கையின் மிகப் பெரிய
— நகை —
வியாபாரிகள்
=O=
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
கிளைத்தானம்:
63, கன்னுதிட்டி,
யாழ்ப்பாணம்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்துசாதனம்

யாழ், கர ௵ ஆனி ௴ ௧௫ உ வெள்ளிக்கிழமை

## புதைபொருளாய்க் கண்டெடுத்த திருவுரு

இற்றைக்குச் சில மாசங்கட்கு முன்னர், நாரந்தனை வடக்கிற் பண்டாரப்புலம் என்னுந் தானத்திற் கற்பாறையுடைத்துக் கற்களெடுக்கும்போது கண்டெடுக்கப்பட்ட பொன்மயமான தேவி விக்கிரகத்தைப்பற்றிய செய்தி முன்னர் இப் பத்திரிகையில் வெளியிடப்பெற்றிருந்தது; இத் திருவுருவும், இதனோடு கண்டெடுக்கப்பட்ட சில பழைய நாணகங்களும் வேறு சில பொருள்களும் அதிகாரிகளிடம் ஒப்புவிக்கப்பட, அவர்கள் கொழும்புநூதனசாலைக்கு அனுப்பியுளளார்கள்; இப்பொழுது இத் திருவுருவும் உடன் எடுக்கப்பட்ட பொருள்களும் கொழும்பு நூதனசாலையில் வைக்கப்பட்டுள்ளனவாம்.

குறித்த திருவுருக் கண்டெடுக்கப்பட்ட ஸ்தானம், முற்காலத்தில் ஒரு சைவத்தலமாக விளங்கியதென்றும், போத்துக்கேயர் ஒல்லாந்தர் செய்த சைவசமயக் கோயில் அழிவிற்கு இத்தானத்திலிருந்த ஆலயமும் இரையாய் விட்டதென்றும் நாரந்தனைவாசிகளும் அயலிலேயுள்ள தீவுகளில் வசிக்கும் அபிமானிகளும் எண்ணுகிறார்கள்; அவர்கள் அப்படி எண்ணுவதற்குத் தக்க ஏதுக்களுண்டெனலாம்; இவ் வியாசத்தை யெழுதுமெமக்கும் குறித்த ஸ்தானத்தைப்போய்த் தரிசிக்கும் பேறு கிடைத்தது; தானம் கடற்கரையோரத்திலிருக்கின்றது; கற்பாறைகள் செறிந்தது; பகிரங்கவேலைப் பகுதியார் தெருக்களுக்கிடுதற்கும், மதகு முதலியவை அமைத்தற்கும் இந்தப் பரந்த வெளியான கற்றரையிலிருந்து கல்லுடைத்து வருகின்றார்கள்; தானங்கள் கரையோரத்திலிருந்தாலும் உவர்த்தன்மையற்ற, ஓரளவிற்குச் செங்கிற மமைந்த நிலமாகக் காணப்படுகிறது; சமீபத்திலே தோட்டமுண்டு, நல்ல தண்ணீருமுண்டு; இப்பொழுது முடிக்குரிய பரந்த வெளிநிலமாகக் காணப்படினும், முற்காலத்திலே மக்கள் குடியேறிவாழ்ந்த நிலமென யூகிக்கக் கிடக்கின்றது; கண்டெடுக்கப்பட்ட புதைபொருள்களுள், நாணகங்கள் எக்காலத் தரசினருக் குரியன என்பதை ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்தறிய முடியும்; இந்தத் தானத்தை இனிமேல் தோண்டவொண்ணாதெனவும், இதிற் கல்லெடுக்கவொண்ணாதெனவும் அதிகாரிகள் இப்போதைக்குத் தடுத்திருக்கிறார்கள்.

நாரந்தனையி லுள்ள சைவமக்களும் அயலூர்களிலுள்ள அபிமானிகளும் இந்தப் புராதன புண்ணிய தானத்திலே ஒரு தேவியாலயத்தை அமைக்க வேண்டுமென்ற வேணவாப் பூண்டவர்களாகக் காணப்படுகின்றனர். இதன் பொருட்டு நாரந்தனைச் சைவமகாசபையொன்று தோன்றிப் பெருமுயற்சி செய்து வருகின்றது; நாரந்தனைப் பகுதியில், விசேடமாக வடக்குப்பகுதியில்இற்றைவரையிற்சிறந்தஆலயமொன்றுமில்லையாம்; ஆதலினால்,மூர்த்திதலந்தீர்த்தமென்னும்மூன்றோடுங்கூடியதாய் ஒருகாலத்தில் விளங்கிய இத்தானத்திலே ஒரு சிறந்த சைவத்தலம் அமைத்து வழிபட வேண்டுமென நாரந்தனைவாசிகள் கொண்ட நோக்கம் மேலானதாகும். இத்தலத்தில் இப்பொழுது ஒரு திருவிளக்கு விடியும்வரை யெரியும்படி கிரமமாக ஏற்றப்பட்டிருக்கின்றது. அங்குள்ள பல மக்கள் அந்த ஸ்தானத்திற் காலைமாலை சென்று தேவியைத் தியானித்து வழிபடுகிறார்கள். இப்படியெல்லா மிருத்தலால் இந்தப் பரிசுத்தமான ஸ்தானத்தோடு சேர்ந்த நிலத்தை அரசினரிடம் பெற்று இதில் ஒரு சிறந்த திருக்கோயில் அமைப்பதே முறையாகும்; இத் தொண்டினைச் செய்யும் நோக்கங்கொண்ட நாரந்தனைச் சைவமகாசபையினர்க்கு அரசினர் உதவி செய்வதோடு, சைவாபிமானிகளெல்லாருந் தங்கள் தங்களாலியன்ற உதவி செய்தல் வேண்டும்; தேவியின் திருவருளை முன்னிட்டுக்கொண்டு இத் திருப்பணியில் ஈடுபடில் இது விரைவில் நிறைவேறுமென்பதே எம் நம்பிக்கை.

---

## தற்கொலை செய்யத் துணிந்தமைக்குக் காரணம்

---

கொழும்பு தெற்குப்பகுதி நீதிபதி திரு. இ. இராமச்சந்திரன், சென்றவாரம் தம் முன்னிலையிற் கொண்டுவந்து விசாரணையின்பொருட்டு விடப்பட்ட M. P. ரொட்ரிக்கோ என்னும் வாலிபனைப்பார்த்து "நீ உன்னுயிரை மாய்க்கத் துணிந்தமைக்குக் காரணமென்ன" என்று வினவியபோது, "ஐயா, கல்யாணஞ்செய்து ஆறும் நாள் என் மனைவி என் வீட்டைவிட்டோடிவிட்டாள், அதனாற்றான் தற்கொலைசெய்ய முயன்றேன்" என்றனன். நீதிபதி அவனை ஒருவருடகாலம் 100 ரூபா நன்னடத்தைப்பிணையில்விட்டார்,

## ஆடி மாச விஷேச தினங்கள்

1-ம் தேதி (17-7-51) செவ்வாய் தெட்சிணாயன புண்ணியகாலம், ஆடிப் [பிறப்பு.

2 ,, (18-7-51) புதன் பூரணை விரதம், மட்டக்களப்பு அன்னைகர் சித்தி விநாயகர் கோயில் கொடியேற்றம்.

3 ,, (19-7-51) வியாழன் தம்பன்கடவை சித்திர வேலாயுதசுவாமி உற்சவாரம்பம்.

7 ,, (24-7-51) செவ்வாய் அமிர்தகழிமாமாங்கப்பிள்ளையார் திருவிழாத் தொடக்கம், பட்டினத்தடிகள் குருபூசை.

11 ,, (27-7-51) வெள்ளி கார்த்திகை விரதம், திருநெல்வேலி நீலாயதாட்சி, புலோலி பர்வதவர்த்தனி, ஆவரங்கால் பர்வதவர்த்தனி, வல்வை-வாலாம்பிகை, வண்-கிழக்கு எச்சாட்டி மாரியம்மை, இராமேசுவரம்பர்வதவர்த்தனிஉற்சவாரம்பம

12 ,, (28-7-51) சனி மூர்த்தி நாயனார், புகழ்ச் சோழ நாயனார் குருபூசைகள்.

15 ,, (31-7-51) செவ்வாய் பிரதோஷ விரதம், கூற்றுவ நாயனார் குருபூசை.

16 ,, (1-8-51) புதன் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் தேர்.

17 ,, (2-8-51) வியாழன் ஆடி அமாவாசை-கீரிமலை சமுத்திர சங்கம தீர்த்தம், அல்வாய் வேலக்கை முத்துமாரியம்மை கோயில் உற்சவாரம்பம்.

20 ,, (5-8-51) ஞாயிறு ஆடிப்பூரம், மேற்படி தேவி கோயில்கள் தீர்த்தம்.

21 ,, (6-8-51) திங்கள் மாவிட்டபிட்டி அங்கணுக்கடவை மீனாட்சியம்மை கோயில், கொக்கட்டிச் சோலை தான்தோன்றி ஈசுவரர் கொடியேற்றம்.

23 ,, (7-8-51) அல்வாய் வேலக்கை முத்துமாரியம்மை, அராலி காரபிட்டி விநாயகர், புங்குடுதீவு கதிர்காமம், வேலணை பெருங்குளம் முத்துமாரியம்மை கோயில் கொடியேற்றம்.

23 ,, (8-8-51) புதன் பெருமிழலைக் குறும்ப நாயனார் குருபூசை.

24 ,, (9-8-51) வியாழன் சுந்தரமூர்த்தி நாயனார், சேரமான் பெருமாள் நாயனார் குருபூசை, பொன்னாலை வரதராசப்பெருமாள் திருவிழாத் தொடக்கம்.

27 ,, (12-8-51) ஞாயிறு கலிய நாயனார், கோட்புலி நாயனார் குரு [பூசை.

29 ,, (14-8-51) செவ்வாய் பிரதோஷ விரதம்.

31 ,, (16-8-51) வியாழன் பூரணை விரதம்.

## நமது சோதிடப்பகுதி

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது

### உங்களுக்குரிய இந்தவாரப் பலன்கள் (1-7-51—7-7-51)

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

இவ்வாரத்தில் பண வருவாயுண்டு, ஆனால் மன ஆறுதலும் தேகசுகமும் இல்லையாம்; வாரமுடிவிற் சத்துரு ஜயமுண்டாம்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம்கால்கள் ரோகிணி, மிருகசீரிடம் 1, 2-ம் பாதம்

பிள்ளைகள் காரணமாக மனக்கிலேசமுண்டு; புதிய நண்பர்களை அதிகம் நம்பியிருக்க வொண்ணாது; தொழில் முயற்சி அனுகூலமுண்டு; பிணக்குகளையும் யோசிக்காமல் கருமஞ்செய்தலையுந்தவிர்த்துக் கொள்க.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3.

தேகசுகமுண்டு; இதுகாறும் யோசித்த கருமங்கள் இந்தக்கிழமை முடிவில் முற்றுக்கு வரும்; புதிய கருமங்களிலே தலையிட வேண்டாம்; ஆண்களாற் பெண்களுக்கும் பெண்களால் ஆண்களுக்குஞ் சுகமுண்டு.

**கடகராசி** புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியம்.

குடும்பத்திற் சில பிணக்கு சேரக்கூடும்; செய்யத் தொடங்கிய புதுக் கருமங்களை அவதானமாகச் செய்க; செய்யுந் தொழிலால் வருவாயுண்டு; ஆனால் வரவுக்கு மேற்பட்ட செலவு சேரும்.

**சிங்கராசி** மகம், பூரம், உத்தரம், 1-ம் பாதம்.

கிழமை முடிவதற்கிடையில் ஒரு நண்பரால் உதவியுண்டு; நம்பிக்கையை விடாமல் ஊக்கத்தோடு வேலைசெய்தாற் சித்தியுண்டாம்; அந்தரங்க சத்துருக்களாற் சில வேளை சங்கடம் சேரக்கூடும்.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4-ம் பாதம் அத்தம், சித்திரை 1, 2-ம் பாதம்.

பணவருவாயுள்ள வாரம்; சொந்தக் கருமங்களிலும் விருத்தியுண்டாம்; வாரமுடிவிற் பணவருவாயுண்டு.

**துலாம்** சித்திரை 3, 4-ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3-ம் பாதம்.

ஞாயிறு திங்கட் கிழமைகளிற் சாவதானமாக நடந்துகொள்க; சகவீனமும் தகப்பன் வழியாராற் சங்கடங்களும் சேரக்கூடும்; புதன்கிழமையின் பின் நல்லகாலமுண்டாம்.

**விருச்சகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

கிழமையின் முதலிரு நாட்களிலும் புதிய கருமங்கள் தொடங்கலாம்; செவ்வாய் தொடக்கம் வியாழக்கிழமை காலை வரை அவதானமாக நடாடுக; எஞ்சிய நாட்கள் நற்பயன் தருவன; ஆனாலும் பிரயோசனத்தைப் பேணுக.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1-ம் பாதம்.

முதல் ஐந்து நாட்களும் செய்யும் முயற்சிக்கும பார்க்கும் உத்தியோகத்திற்கும் அனுகூலமானவை; மேலும் காரிய சித்தியும் பொருள் வருவாயுமுண்டு; ஆனால் வியாழக்கிழமை தொடக்கம் சனிக்கிழமை வரை சாவதானமாக நடந்துகொள்க.

**மகராசி** உத்தராடம் 2 3 4-ம் பாதம் திருவோணம், அவிட்டம் 1, 2-ம் பாதம்

இவ்வாரத்தில் பழிமொழி கேட்க வேண்டி சேரும்; ஆனால் பொருள் லாபமுண்டு; மன ஆறுதல் இல்லை; வரவுக்கு மேற்பட்ட செலவுண்டு.

**கும்பராசி** அவிட்டம் 3, 4-ம் பாதம் சதயம், பூரட்டாதி 1-ம் 2-ம் 3-ம் பாதம்

வீட்டிற் சங்கடமுண்டு; சில நாட்களுக்கு மன ஆறுதல இல்லை; ஆனாற் பொருள் வருவாயுண்டு.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

பழைய தொடர்பினாற் மகிழ்ச்சியுண்டு; பணவருவாயுண்டு; ஆனால் கிழமை முடிவிற் பணச்செலவுண்டு; காத்திரப்பிரசாரம் நல்ல செய்தி கிடைக்கும்.

## 6000 அடி உயரத்தில் மானச சம்பாஷணை

மன நினைவுகளை அறியும் சக்தி புள்ள சிட்னிபிடிக்ரன் என்பவரும், அவருடைய பாரியாரும் அவுஸ்திரேலியாவிலிருந்து பிரித்தானியாவுக்குப் போகும் மார்க்கத்தில் கொழும்பில் தங்க சேர்ந்தது. அவுஸ்திரேலியாவில் தங்கியிருந்த காலத்தில் தாங்கள் இருவரும் செய்த ஓர் சித்து விளையாட்டை பிடிக்ரன் பின்வருமாறு கூறினர். சிட்னிகரில் அவரது மனைவி ஆகாயவிமானத்திற் சென்று 6000 அடி உயரத்திலிருந்தபோது அவர் நிலத்திலிருந்து அனுப்பிய நினைவுச் செய்திகளை அவர் மனைவி யாதொரு தவறுமின்றிக் கிரகித்துப் பதிவு செய்தனராம்.

## யாழ்ப்பாணம் உயர்தர நீதிமன்ற விசாரணை

யாழ்ப்பாணப் பகுதி உயர்தர விசாரணை வருகிற யூலாய் மீ 2-ந் தேதியாழ்ப்பாணநகரமண்டபத்தில் ஆரம்பமாகும்; நீதியரசர் M. F. S. பிள்ளை தலைமை வகிப்பார். விசாரணைக்காகிய 9 வழக்குகளில் 7 கொலைக் குற்றச்சாட்டு வழக்குகளாம்.

# அடைவு நகை விற்பனவு விளம்பரம்

*1892*-ம் ஆண்டின் *8*-ம் இலக்கக்கட்டளைச்சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவு பிடிக்கும் யா. வ. மே. பெ. அரு மு முத்துச்சாமி செட்டியார் கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் *12*ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

| நம்பர் | உரிஞு | கொடுத்த ரூபாய் | ஊர் பெயர் நகைவிபரம் | |
|---|---|---|---|---|
| 85 | 19-4-48 | 8 | மண்டைதீவு சின்னத்தம்பிகர்ணையா சாட்டுக்கடுக்கன்சோடி | 1 |
| 339 | 28-4 48 | 13 | சோனகதெரு சுல்தான் அப்துல்காதர் முகம்மதுசுல்தான் முறித்த சில கல்லில்லாத இமி. வெள்ளைக்கல் தொங்கட்டானுடன் காதுக்குச்சி 1ம் கல்லில்லாத தொங்கட்டானுடன் இமி. வெள்ளைக்கல் மூக்குத்தி 1ம் திருகுகளை | 1 |
| 1196 | 31-5-48 | 10 | புனகிரி விஞசித்தம்பி சங்கரப்பிள்ளை சிறுமோதிரம் | 2 |
| 1424 | 8-6-48 | 25 | மானிப்பாய் செல்லப்பா அம்பலவாணர் கம்பிக்காப்பு | 1 |
| 1432 | 9-6-48 | 7 | ஓட்டுமடம் சின்னத்தம்பி சப்பன், திருகில்லாதஇமிவெள்ளைக்கல்காதுக்குச்சி சோடி 1ம் பழுதுதொங்கட்டானுடன் காதுவாளி சோடி | 1 |
| 1595 | 15-6-48 | 15 | ஸ்டான்லிரோடு சூசைப்பிள்ளை ஞானப்பிரகாசம் விலாசம்போட்ட மோதிரம். | 1 |
| 1638 | 17-6-48 | 45 | கொக்குவில் K. T. எந்திரிகப் மோதிரம் | 1 |
| 1657 | „ | 55 | காங்கேசன்துறை H. A. அந்தோனிஅப்பு. இமி கல் [மோதிரம் | 1 |
| 2126 | 6-7-48 | 10 | காச்சியம்மன்கோவிலடி பொன்னுத்துரை சச்சிதானந்தம் சேர்மானக்கல் தொங்கட்டானுடன் இமி வெள்ளைக்கல் காதுக்குச்சி சோடி | 1 |
| 2267 | 13-7-48 | 60 | வில்சன்ரோடு ஹெட்டி ஆரச்சிகே எவியஸ் அப்பு இமி கல் மோதிரம் | 1 |
| 2281 | „ | 50 | சுன்னாகம் W. பொன்சேக்கா மோதிரம் | 1 |
| 2292 | 14-7-48 | 20 | வட்டுக்கோட்டை நாகலிங்கம் கனகரெத்தினம் ஒன்றுக்கு குண்டுமுறித்த குண்டுவைத்த பிருஞ்சுக்காசு | 2 |
| 2347 | 16-7-48 | 10 | சிறும்பியடி ஆறுமுகம் இராசையா சிமிக்கி சோடி | 1 |
| 3898 | 30-9-48 | 45 | ரயில்வே ஸ்டேஷன K. A. பீட்டர் இமி நீலக்கல் மோதிரம் | 1 |
| 4335 | 19-10-48 | 15 | ஊர்காவற்றுறை அ. யோண் குரூஸ் கிளாவர்மோதிரம் | 1 |
| 4463 | 26 10-48 | 10 | சீராவியடி வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் இமிகல்தோடு சோடி | 1 |
| 4733 | 6-11 48 | 7 | ஆனைப்பந்தியடி தம்பையா முத்துக்குமாரசாமி திருகில்லாத இமி வெள்ளைக்கல் காதுக்குச்சி சோடி 1ம் தொங்கட்டானுடன் காதுவாளி சோடி. | 1 |
| 5592 | 12-12-48 | 4 | ஓட்டுமடம் சின்னத்தம்பி பெண் அய்யாள் பழுது மாத்துவிட்ட காட்டுக்கடுக்கன் சோடி | 1 |
| 5814 | 21 12-48 | 5 | சீராவியடி வேலுப்பிள்ளை சப்பிரமணியம் கல்லில்லாத சேர்மானக்கல் தொங்கட்டானுடன் காதுக்குச்சி 1ம் டை கல் தொங்கட்டான் | 1 |
| 5881 | 23-12-48 | 35 | ஆஸ்பத்திரிரோடு M G. குரே இமி நீலக்கல் மோதிரம் | 1 |
| 7089 | 8-2-49 | 12 | மண்டைதீவு சின்னத்தம்பி சபாரத்தினம் இமி. வெள்ளைக்கல் காதுக்குச்சி சோடி | 1 |
| 7146 | 10-2-49 | 15 | சங்குவேலி காகமுத்து அருணாசலம் குண்டு | 2 |
| 7981 | 14-3-49 | 20 | சிறும்பியடி ஆறுமுகம் இராசையா இமிகல்தோடுசோடி | 1 |
| 7985 | 16-3-49 | 4 | வண்கிழக்கு முத்துச்சாமி ஆசாரி ராமலிங்கம் இமி வெள்ளைக்கல் மூக்குத்தி | 1 |
| 8192 | 23-3-49 | 16 | காவாந்துறை பத்திநாதர் அருளானந்தம் ஒன்றுக்குக் கல்லில்லாத மோதிரம் | 3 |
| 9004 | 26-4-49 | 12 | சவாலிதெற்கு பிலிப்பு மருசலின் இமி வெள்ளைக் கல் காதுக்குச்சி சோடி | 1 |
| 9163 | 3-5-49 | 60 | மண்டைதீவு சின்னத்தம்பி சபாரெத்தினம் அச்சுக்காப்பு | 1 |
| 10441 | 28 6-49 | 20 | கொக்குவில் மேற்கு காகுட்டி காகமணி சிகில்மோதிரம் | 1 |
| 11677 | 18-8-49 | 10 | கொட்டடி விஞசித்தம்பி கந்தையா மாத்துவிட்ட இமி வெள்ளை நீலம் கட்டிய தொங்கட்டான் சோடி. | 1 |
| 11692 | 19-8-49 | 30 | மண்டைதீவு சின்னத்தம்பி சபாரத்தினம் இமிகல் தோடு சோடி | 1 |
| 12787 | 3-10-49 | 15 | கந்தர்மடம் வே. கதிரேசு சுப்பிரமணியம் இமி வெள்ளைக்கல் தோடு சோடி | 1 |
| 13145 | 19-10-49 | 20 | காரைதீவு கிழக்கு முருகேசு சுப்பிரமணியம் சில கல்லில்லாத இமி வெள்ளை பச்சைகட்டிய மோதிரம் | 1 |
| 14437 | 15-12-49 | 10 | பறங்கித்தெரு அக்கினேஸ்போல் இமி வெள்ளைக் கல் மோதிரம் | 1 |
| 14608 | 22-12-49 | 25 | வண்மேற்கு கணபதிப்பிள்ளை சிவரெத்தினம் சிகில் மோதிரம் | 1 |

**விற்பனவு** 18–7–51 புதன்கிழமை காலை 10 மணி தொடக்கம் மேற்படியார் கடையில் எழுபட்ட நகைகள் புறநீங்கலாக மீதி நகைகள் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

S Pasupathy Chettiar,
*Auctioneer.*

M. 43 29, 3—7—51.

# ரேடியோ

## ✻ இசைத்தட்டு

**திருச்சி சனி ஜூன் 30**

காலை 7 10 கீதாரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 எல் சாரதா பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம் ✻ 8 30 முடிவு.

1 நீங்கள்கேட்டவை ✻ 1 30 ஆங்கிலத்தில்செய்தி 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 வாத்யகோஷ்டி ✻ 2 தமிழில்செய்தி 2 10 சித்ரகானம் ✻ 2 45 முடிவு.

மாலை 5 30 அனந்தசபுரம் வி சிங்காரவேலு வயலின் 5 45 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில்செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 ரேடியோ வாத்யகோஷ்டி 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 சித்ரகானம் ✻ 7 45 வி வி சடகோபன் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 டி வி பலுஸ்கர் ஒலிப்பதிவு 10 முடிவு.

**திருச்சி ஞாயிறு ஜூலை 1**

காலை 7 10 கீதாரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 இசைச்சுவடு ஒலிப்பதிவு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம் ✻ 8 30 முடிவு.

12 வரவேற்பு 12 30 சூர்யகாந்த சதம்பநிகழ்ச்சி 1 மணிமலர் 1 30 ஆங்கிலத்தில்செய்தி 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 மாரியப்பசுவாமிகள் ✻ 2 தமிழில் செய்தி 2 10 பெண்ணுலகம் 2 30 செண்டு இசைநிகழ்ச்சி 3 முடிவு.

மாலை 5 30 வீணை ஆ இ ரே வித்வான் 5 45 கடலூர் வி ராமமூர்த்தி பாட்டு 6 ஆங்கிலத்தில்செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 நீங்கள்கேட்டவை ✻ 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 சித்ரகானம் ✻ 7 45 இவர்கள் இன்றி பேச்சு 8 பக்த ராமதாஸ் 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 சேர்மாதேவி எல் சுப்பிரமணிய சாஸ்திரி வீணை 10 முடிவு.

**திருச்சி திங்கள் ஜூலை 2**

காலை 7 10 கீதாரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 யாழ்ப்பாணம் என் ஷண்முகரத்னம் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்ரகானம் ✻ 8 30 முடிவு.

1 நீங்கள்கேட்டவை ✻ 1 30 ஆங்கிலத்தில்செய்தி 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 கே சுப்பிரமணியம் வீணை ✻ 2 தமிழில் செய்தி 2 10 மாயூரம் என் என வடிவாம்பாள் பாட்டு 2 45 முடிவு

மாலை 5 30 என் சுவாமிநாதய்யர் புல்லாங்குழல் 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில்செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 திருச்சிவாத்யகோஷ்டி 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சித்ரகானம் ✻ 7 45 தென்னாட்டு முத்து பேச்சு 8 தானவாத்தியகச்சேரி 8 15 என் சுவாமிநாதய்யர் புல்லாங்குழல் 8 30 எம் என் சுப்புலக்ஷ்மி ✻ 8 45 ஆங்கிலப்பேச்சு 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 யாழ்ப்பாணம் என் ஷண்முகரத்னம் பாட்டு 10 முடிவு.

**திருச்சி செவ்வாய் ஜூலை 3**

காலை 7 10 கீதாரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 பி எஸ் லலிதாபாய் பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம் ✻ 8 30 முடிவு.

1 இசைவேளை ✻ 1 30 ஆங்கிலத்தில் செய்தி 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 இருகுரல்இசை ✻ 2 தமிழில்செய்தி 2 10 எஸ் வைத்தியநாதன் பாட்டு 2 45 முடிவு.

மாலை 5 30 எ சிட்டிலிங்கம்பிள்ளை நாகஸ்வரம் 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில்செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 பி எஸ் லலிதாபாய் பாட்டு 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சித்ரகானம் ✻ 7 45 கே எல் வெங்கட ராமய்யா, வி. தியாகராஜன் இருவயலின்கள் தஞ்சாவூர் ராமதாஸ் ராவ் மிருதங்கம் 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 எ சிட்டிலிங்கம்பிள்ளை நாகஸ்வரம் 10 முடிவு.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வட்டுக்கோட்டை மேற்கு
1. இராமலிங்கம் செல்லத்துரை
வழக்காளி

எதிராக
வட்டுக்கோட்டை மேற்கு
1. வேலுப்பிள்ளை தியாகராசா
தற்போது கொழும்பு
வட்டுக்கோட்டை மேற்கு
2. பெண் பத்மாவதி
எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 6653 - ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் முதலாம் தண்டக்காணியை 1951ம் ஆடிமீ 14உ சனிக்கிழமை பிற்பகல் $4\frac{1}{2}$ மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**காணி விபரம்**

வட்டுக்கோட்டை கோவிற்பற்று வட்டுக்கோட்டை கிழக்கு இறை கிராமயும் கிரட்டிப்பனை செம்பரப்பு $24\frac{1}{2}$ எல்லை கிழக்கு சிதம்பரம்பிள்ளை வயித்திலிங்கத்துக்குரிய ஆதனம் வடக்கு சிதம்பரப்பிள்ளை வயித்திலிங்கத்துக்கும், முத்துமாரி அம்மன் கோயிலுக்குரிய ஆதனமும், மேற்கு தாமோதரம்பிள்ளை பெண் சின்னம்மாவுக்குரிய ஆதனம். தெற்கு ஒழுங்கை. இதடங்கலில் சொரியலாய் $\frac{2}{3}$ விற்கப்படும்.

ந. ஆறுமுகம்
கொமிஷனர்

சித்தங்கேணி
14 - 6 - 1951.
M 42 29—6—51.

சாவகச்சேரி

## மங்கையர் முன்னேற்றச் சங்கம்

ஷை சங்கம் இந்த யூன் மீ 25-ந்உ திங்கட்கிழமை மாலை $4\frac{1}{2}$ மணியளவிற் சங்கத்தாரினத் தமிழ் வித்தியாசாலையிற் தேவாரபாராயணத்துடன் ஆரம்பமாயிற்று. கூட்டத்தில் அநேக பெண்கள் கூடியிருந்தனர். ஸ்ரீமதி செ. கனகரத்தினத்தைத் தலைவியாகச் சபையோர் ஏகமனதாகத்தெரிவுசெய்தனர் பின் அத்தலைவியின்கீழ் கூட்டம் நடைபெற்றது. அத்தருணம் ஸ்ரீ தி செ செல்வத்துரை சங்கத்தின் அவசியத்தையும் கொண்டு நடத்தும் முறையையும் இதற்கு ஒத்துழைப்பு அவசியம் வேண்டுமென்றும் கூறினர். பின் திரு. இ. த. சுப்பிரமணிய ஆசிரியர் மங்கையர் சங்கத்தாற் பொருளாதாரமும் சுகசீவியமும் ஏற்படுத்தலாம என்பதைப்பற்றியும் சங்க முன்னேற்றத்தையிட்டும் சங்க நடை முறைகளைப்பற்றியும் ஓர் சொற்பொழிவாற்றினர். பின் இரு ஆசிரியைகள சங்கத்தின தேவைகளையெடுத்து உரைத்தனர். அதன பின சங்க அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். (ஸ்ரீமதி. செ. கனகரத்தினம் தலைவர் ஸ்ரீமதி சி. உமையம்மை உபதலைவர். செல்வி வை. காமாட்சி காரியதரிசி. ஸ்ரீமதி ச. இராசலட்சுமி உப காரியதரிசி. செல்வி பொ. தெய்வானைப்பிள்ளை தனாதிகாரி. அங்கத்தவர் 15 பேர் தெரியப்பட்டனர். ஸ்ரீமதி. சி. வைத்தியலிங்கம் போஷகராகவும் ஸ்ரீமதி பொ. சுப்பிரமணியம் கணக்குப்பரிசோதகராகவும் தெரிவுசெய்யப்பட்டனர். கூட்டம் தேவாரபாராயணத்துடன் இனிது நிறைவெய்திற்று.

—நிருபர்.

# மகளிர் மன்றம்

## சீதன வேட்டை

I

தமிழ்நாட்டுப் பெண்களே! தமிழ்ப் பண்பாடு வளர்த்தோங்கும் நம் யாழ்ப்பாணப் பெண்களே! இன்னுமா உறங்குகின்றீர்கள்! சீதன வேட்டை என்னும் பேய் எங்கும் தலைவிரித் தாடுகின்றது. அதிலும் சிறப்பாக யாழ்ப்பாண மக்களிடையே தாண்டவம் ஆடுகின்றது. அது விளைக்கும் இன்னல்களை மதியீர்களா? சமூக வலத்தினை அரித்துண்பது அப்பேய்; தெய்வீக மணக்கமழும் இல்லறவாழ்வினை ஒரு வியாபார மாக்கிவிடுகின்றது. அவ்வாழ்வினைச் சுவையற்ற பண்பாடற்ற ஒரு சிறிய சந்தைக்கூட்டமாக்கி விடுகின்றது. இதனை, உன்னுந்தோறும் உள்ளத்தை வெட்கம் அரித்துண்கிறது. என்னே! ஒரு சம்பிரதாயத்திற்கு அறநெறிப்பாற்படாத வழக்கிற்கு அடிமைகளாய் விட்டோம். இச்சீதன வேட்டைப் பேயின் கொறறத்தை அடக்கி அதன் ஆதிக்கத்தை முறித்தெறிய உங்களிடம் சக்தியில்லையா? உங்களிடம் சக்தியிருக்கின்றது. அதனை இன்றே உணருங்கள்! இன்றே அச்சக்தி யென்னும் ஆயுதத்தைக் கையிலேந்திப் போராடப் புறப்படுங்கள்! இனி அரைக்கணமேனுந் தாமதிக்கவேண்டாம்! சக்திமான்கள் மூச்சினிலே பிறக்கட்டும்! அது சீதனப் பேயினைச் சாம்பராக்கட்டும்!

சீதனம் கொடுக்கும் வழக்கினுல் ஏற்படும் இன்னல்களை நீங்கள் அறியீர்களா? உலகம் முழுவதன் எண்ணத்திலேயே ஒரு புரட்சியை உண்டாக்கிய உத்தமன் காந்தி என்ன சொன்னர். "பெண்மணிகளே! சீதனக் கொடுமையை எதிர்க்கும் ஆயுதம் உங்கள் கைகளிலேதான் இருக்கிறது. எல்லாரும் ஒத்து நின்று சீதன வேட்டையாடும் வாலிபர்களை மணப்பதற்கு மறுங்கள். அஹிம்சையும சத்தியமும் நிறைந்த வழியில் நின்று அதனை எதிர்த்துப் போராடுங்கள் நீங்கள் வெற்றி பெறுவீர்கள்!" இற்றைக்கு இருபத்துநான்கு ஆண்டுகட்கு முன மகாத்மா காந்தியடிகள் இராமநாதன் கல்லூரிக்கு வந்தபொழுது இவ் வார்த்தைகளைக் கூறிச் சென்ருர். மகாத்மா காந்தியின் அறிவுரைகளைக்கேட்டு உலகம் தலைசாய்த்தது. இந்திய நன்ருடு சுதந்திரம் பெற்றது. ஆனுல் அந்தப் பெரிய மகானின் உரைகளைக் கேட்டு நாம் விழித்தெழவில்லை! இந்த இருபத்துநான்கு ஆண்டுகளுக்குள்ளும சீதன வேட்டைப்பேய் இன்னும் கூடிய ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிவிட்டது; ஏன்? காந்தி மகான் கூறியபொழுதுங் கூட உணர்ந்து செயலாற்ருத மங்கையர் வாழுமநாடு இந்நாடு.

சகோதரிகளே! சென்றவாரம் பிரதி கல்விமந்திரி திரு. கனகரத்தினம் என்ன கூறினர்? இதனையே மீண்டும் எடுத்து இடித்துக் கூறினர். சீதனக் கொடுமையை எதிர்க்கும வழிகளையும் எடுத்துக் காட்டினர். இந்த உரைகூட உங்கள் நெஞ்சத்தைத் தட்டவில்லையா! பெண்குலத்துக்கே ஈனத்தைத்தரும் இச்சீதன வேட்டைப்பேயைத் அடியோடு நாட்டைவிட்டு விரட்டிவிட வேண்டாமா? உங்கள் அயல்நாட்டு நன்மகளிர்கள் இச்சீதனக் கொடுமையை நீக்குவதறகு இப்பொழுது சில காலமாகச் சட்டசபையிற் போராடிக் கொண் டிருக்கிருர்கள். இந்திய நாட்டிற் சீதனம் கொடுக்கும் வழக்கம் மிகச் சிலரிடையே மாத்திரம் காணப்படுகிறது. கற்ருேர் அவ்வழக்கத்தை வெறுத்து ஒதுக்கிவிட்டார்கள். கற்றதனுலாய உணர்வும் செம்மையான மனப்பண்பாடும் பெற்றவர்கள் அவர்களே. அவர்கள் அயலிலே இருக்க நாம் சீதன வேட்டைக்கு அடிமைகளாக இருக்கின்ருேம். இதன் காரணம் என்ன?

ஒரு ஆடவனுக்கும் ஒரு பெண்ணுக்கு மிடையில் மணம் பேசும் பொழுது, பெண்ணின் தகப்பனுர் எவ்வளவு சீதனம் கொடுப்பார்? என்பதே முதற்கேள்வி மணமகனின் வீட்டார் போதுமென்று சொல்லி ஏற்கத் தகுந்த முறையிற் சீதனம் இருந்தாற்ருன் மணப்பேச்சு ஆரம்பிக்கும். ஆரம்பித்தாற் சீதனப் பேச்சுக்கள் பலவடிவங்களாக உருக்கொள்ளும். சீதனத்தி லடக்கிக் கூறப்படும் பொருள்கள், சீதனத்தின் தொகை இவை யெல்லாம் பலவிதமாக வெளிப்படும். மணமகனின் உத்தியோகம் எவ்வளவு உயர்ந்ததாக விருக்கிறதோ அவ்வளவிற்குச் சீதனமுங் கூடும். சுருங்கக் கூறின், மணமகனின் வேதனத்திற்கும் சீதனத்திற்கும் ஒரு கிரக்தாமான விகிதம் இருக்கவேண்டும். சீதனங் கொடுப்பது ஒரு பொருளாதாரப் பாதுகாப்பென்று சொல்லிக்கொள்வர் சிலர்; அப்படியானுல் உயர்ந்தவேதனம் பெறும் ஒரு மணமகனுக்கு ஏன் உயர்ந்த சீதனங் கொடுக்கவேண்டும்? உண்மையாக ஆராய்ந்து பார்ப்பின் குறைந்தவேதனமபெறும் மணமகனுக்கே உயர்ந்த சீதனங் கொடுக்கவேண்டும். அப்படி யிருந்தாற்ருன் சீதனம் ஒரு பொருளாதாரப் பாதுகாப்பாக அமையும், ஆனுல் இத்தகைய முறையை நாம கண்டிலேம்.

சென்றவார இந்துசாதன வெளியீட்டில், சீதனங் கொடுக்கும் முறை பத்திரிகாசிரியரினுல் நன்கு எழுதப் பட்டுளளது. இனி, மணப்பேச்சுகள் ஆரமபித்தபின் பின் சீதனத்தைப் பலவடிவத்தில கேட்கின்ருர்கள். மணமகனுக்குத் தற்காலமுறையிலமைக்கப்பட்ட வீடு ஒன்றுகொடுக்கவேண்டும். இத்துடன் நின்றுவிடாது, மணமகனுக்கு மோட்டார்வண்டி பெண்ணுக்கு நகை ஐயாயிரந்தொடங்கிப் பதினையாயிரம்வரை கொடுக்கவேண்டும். பணம் மலிந்த 'ரொக்கம்" இருபத்தையாயிரமாகவது வங்கி நோட்டுக்களாக மணவினை ஆரம்பிப்பதற்கு முன்னே கொடுக்கவேண்டும். இத்துடன் சீதனம் முடிந்தவிட்டதென்று எண்ணுதீர்கள்! மணமகனுக்கு கிலங்களும் கொடுக்கவேண்டும். மணமகன் இவற்றைப்பற்ற அதிக சிரத்தை கொள்ளாவிட்டாலும், மணமகனின் பெற்ருேர் இவற்றை வரையறுத்து வாங்குவதில் முனைந்து நிற்பார்கள், 'தானங்கொடுத்தமாட்டைப் பல்லைப் பிடித்துப் பார்க்காதே' என்று கூறுவார்கள். ஆனுல், தம்மகன் சீதனமாகப்பெறும நிலங்கள் நல்லவையா அல்லவையானை நிலங்களின் எல்லைகளைச்சுற்றிப்பார்த்துவரும் நற்பெற்ருேர்களையுடைய மணமக்களும் இருக்கின்ருர்கள். இத்துடன் சீதனத்திற் திருப்திவருவது அருமை பெண்ணின் தந்தையிடம் இருப்பதையெல்லாம வசக்கத்துணிவர். இன்றேல் பெண்ணின் தந்தை கடன் பட்டுக்கொடுக்கவேண்டும். பின்பு அவர் தம் சீவியகாலம் முழுவதும் உழைத்துத் தம் கடனையடைக்க வேண்டும். இத்தனையோடு நின்றுவிடுகின்றதா? ஆபரணங்கள் உடலை அலங்கரிப்பதற்கே அணியப்படுகின்றன. ஆனுல் பதினுயிரம் ரூபா அல்லது ஐயாயிரம ரூபா பெறுமதியான நகை தருவதாகக் கூறிவிட்டால் பெண் அந்தநகைகளை அணிந்தே தீரவேண்டும். அது அழகாக இருந்தாலுஞ்சரி அல்லாதொழிந்தாலுஞ்சரி. ஆனுல் பொருளாதார நிபுணர்களான சில மணமக்கள் நகைகளை வயிரங்களிற் கொடுக்கலாமென்று தங்கள் ரசிகத்தன்மையைக்காட்டத் தலைப்படுகிருர்கள். இப்படியாக மாப்பிள்ளை கேட்ட முறையிற் சீதனங் கொடுக்க முடியாவிட்டால் மணப் பேச்சு நின்றுவிடும். தெய்வீகத் தன்மைவாய்ந்த மணவினை கேவலமானவியாபாரமாக வந்துவிடுகிறது. மணமக்கள் விவாகச் சந்தையிலுள்ள பொருள்களாக மாறிவிடுகின்ருர்கள். இப்படி மணமகனினவீட்டார் சீதனம் பேசும் முறையை ஆராய்ந்து பார்த்தால், மணமகன் பெண்ணை மணக்க விரும்புகிருரா, அன்றேல் பணத்தை மணக்க விரும்புகின்ருரா? என்ற ஐயம் உண்டாகின்றது. மணமான பின்பு, சீதனத்தைப்பற்றிய பேச்சுக்கள் நின்றுவிடுவதில்லை. தருவதாகக் கூறிய சீதனம் முழுவதையும் பெண்ணின் தப்பனுர் கொடுக்க இயலாதிருந்தால், அது கொடுக்கும் வரையுங்கணவனும் மனைவியும ஒற்றுமையாகவிருப்பதில்லை. பிள்ளைகள் பிறந்த பின்புங்கூடச் சீதனக் கொடுமையினுல் எத்தனை சண்டைகள் விளைகின்றன. உன் தகப்பனிடம சீதனத்தை வாங்கிக்கொண்டுவா என்று தன் மனைவியைத் தாய் வீட்டிற்குத் துரத்தும் ஆடவர் எத்தனைபேர்! மணமானபின்பு சீதனத்தை வட்டியுடன் வாங்க முயலுபவர் எத்தனைபேர்.

### சைவப்பிரசங்கம்

காரைநகர், கருங்காலிச் சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் இந்த ஆனிமீ அ௨ (22-6-51) வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் ஆசிரியர் வே. சங்கரப்பிள்ளை சைவ ஒழுக்கம் என்னும் விஷயத்தில் சிறந்த பிரசங்கஞ் செய்தார். பிரசாரகர் சைவ அன்பர்கள் ஆலய வழிபாடு செய்து திய நெறியை நீக்கி நன்னெறியில் வளர்ச்சி படைத்து சைவ ஒழுக்கமுடையவராதல் அத்தியாவசியகமென்பதை வற்புறுத்தி வைத்தார்கள். —கடித.


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ௵ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

134,3670

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு

ஏசகிந்தி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் 1½ விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு ஷட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம், இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிருப்பர்.

Std. 14 20-11-46—20-11-49



வந்திருக்கின்றன! வந்திருக்கின்றன!!

# திறமான தேக்கமரங்கள்

பல தினிசுகளிலும் வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
74 ஆஸ்பத்திரி ரோட்
யாழ்ப்பாணம்

Std 2


Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245, Navalar Road, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Perakasa Press Vannarponnai, Jaffna, on Friday June 29, 1951